1995 ஏப்ரல் 6]

இன்றைக்கு ஆய்வுக்காக என்று சிறு தொகையை அங்கேயிருக்கிற உள்ளாட்சி நிறுவனங்கள் செலுத்த வேண்டிய கட்டாயம் இருக்கிறது. அதையும் குடிநீர் வடிகால் வாரியமே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொன்னால் நிதிச்சுமை அதிகமாக ஆகிற காரணத்தினாலே அது ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் இந்தப் பிரச்சினை குறித்து வாரியத்திற்கு அறிவுரை வழங்கி ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 260, திரு. ஆர். பி. பரமசிவம், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

260—

கல்வராயன் மலையில் தேனீ வளர்ப்புப் பண்ணை ஏற்படுத்துதல்.

***19215**—*திரு. ஆர். பி. பரமசிவம் :*

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்வராயன் மலையில் "தேனீ வளர்ப்புப் பண்ணை" ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டத்தில் உள்ள கல்வராயன் மலைப் பகுதியிலே தேனீ பண்ணை அமைத்தல் அரசு செயற்குறிப்பில் இல்லை.

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வராயன் மலை என்னுடைய மாவட்டத்தினுடைய மேற்கு எல்லையாக இருக்கின்றது. அங்கு மலைவாழ் மக்கள் கிட்டத்தட்ட 300, 350 கிராமங்களில் வாழ்ந்து வருகிறார்கள். பொருளாதார வளர்ச்சியில் அடித்தட்டில் இருக்கின்ற அந்த மக்களுக்குப் பொருளாதாரத்தில் வளர்ச்சியடையும் வகையில் இந்தத் தேனீக்கள் பண்ணை வைத்து அதன் மூலம் அவர்கள் பொருளாதாரம் வளர்ச்சியடைய அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கல்வராயன் மலையானது இரண்டு மாவட்டங்களில் அமைந்துள்ளது. சேலம் மாவட்டத்திலும், விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டத்திலும் அமைந்துள்ளது. விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டத்திலுள்ள இந்த கல்வராயன் மலைப் பகுதியிலே கரியலூர், இன்னாடு, தேராப்பட்டு ஆகிய கிராமங்களில் கிட்டத்தட்ட 275 மலைவாழ் மக்களுக்கு ஒவ்வொரு குடும்பத்துக்கும் கிட்டத்தட்ட பத்து பெட்டிகள் வீதம் கொடுக்கப்பட்டு இன்று 2850 தேனீ வளர்ப்புப் பெட்டிகள் கொடுக்கப்பட்டுள்ளது. வாரியத்தின் மூலம் அந்தத் தேனீ வளர்ப்புத் தொழிலை ஊக்குவிப்பதற்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. மேலும் இந்தக் கரியலூர் பகுதியிலே 23-11-1985 ஆம் ஆண்டு முதல் ஒரு கூட்டுறவுச் சங்கமானது செயல்பட்டுக் கொண்டு வந்திருக்கிறது. ஆகவே, இந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய, இந்தத் தேனீ வளர்ப்புத் தொழில்களில் ஈடுபட்டிருக்கக்கூடிய மலைவாழ் மக்களுக்கு உதவ வாரியத்தின் மூலம் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11.05

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்களின் காவல் தெய்வமாக விளங்குகின்றார்கள் நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். அந்தத் தேன் அருமருந்தாகப் பயன்படுகின்ற நிலை இருந்து வருகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மலைவாழ் மக்களுக்குப் போதிய வசதி செய்து கொடுத்திருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். தமிழகத்திலே உள்ள தேனீக்கள் வைரஸ் என்ற ஒரு நோயால் பாதிக்கப்பட்டு இறந்துவிட்டதை அரசு அறியுமா ? அப்படி அரசு அறிந்திருந்தால் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன். அதே நேரத்தில் நம்முடைய தேனீக்களைவிட சைனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட தேனீக்கள் கூடுதல் தேனை அங்கே சேகரிக்கிற நிலை இருப்பதால், கேரளாவில் இந்த சைனாவிலிருந்து வரவழைக்கப்பட்ட தேனீக்களைப் பயன்படுத்துகிறார்கள். அதேபோல, கல்வராயன் மலைப் பகுதிகளிலே சைனாவிலிருந்து வரவழைத்து தேனீக்களைப் பயன்படுத்துவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனீகளுக்கு வைரஸ் நோய் தாக்கியதாக மாண்புமிகு

உறுப்பினர் சொன்னார்கள். தேனீகளுக்கு நோய் வந்தது உண்மைதான். ஆனால், எந்த நோய் என்பதை இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை. பூனாவில் இருக்கக்கூடிய தேனீ ஆராய்ச்சி மையத்திலிருந்துகூட சம்பந்தப்பட்ட அதிகாரிகளை வரவழைத்து நாங்கள் ஆராய்ச்சி மேற்கொண்டபோது, அதற்கு என்ன நோய் தாக்கியிருக்கிறது என்பதை இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை. இருந்தாலும் நாங்கள் இன்னும் முயற்சி எடுத்து வருகிறோம். சைனாவிலிருந்து கொண்டு வரப்பட்ட அந்தத் தேனீக்களை கல்வராயன் மலைப் பகுதியிலே அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டபோது, சாத்தியக்கூறுகள் இல்லையென்று தெரிவித்தார்கள். ஆகவே, அந்தத் திட்டம் கைவிடப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

250—

துத்திகுளம் நீர்ப்பாசனக் குளத்தைச் செப்பனிடுதல்.

***20667**—*திரு. எஸ். எஸ். ராமசுப்பு :*

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், துத்திகுளம் நீர்ப்பாசனக் குளத்தை தூர் வாரிச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், தென்காசி தாலுக்கா கீழப்பானூர் ஒன்றியம் துத்திக்குளம் கண்மாயினை தூர் எடுத்தலுக்கான மதிப்பீடு ரூ. 31.65 இலட்சங்களுக்கு (93-94 விலை விவரப்படி) தயாரிக்கப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

257—

விளாத்திக்குளம் அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம்.

***37906**—*திருமதி என். கனகவல்லி :*

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—